உ
சிவமயம்.

ஸ்ரீ வள்ளிக்கும் தெய்வானைக்கும் சக்களத்திப் போராட்டம்.

741

இஃது

உக்கடை மகா-ள-ள-ஸ்ரீ ரு. ம. கிருஷ்ண பிள்ளையவர்கள்
விருப்பத்தின்பேரில்

மைசூரைச்சார்ந்த சந்திரபட்டினம் சங்கீத வித்வ சிங்கம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ வீரண்ணுவியாரவர்கள் மாணுக்கரிலொருவரும்
கும்பகோணம் அருட்கவி M. K. P. M.
மனோரஞ்சித நாயனர் அவர்கள் பிரதம மாணவரும்
திருவாரூரைச்சார்ந்த திருநெய்ப்பேர் ஜோதிஷ சாஸ்திர
வித்துவான் V. P. கந்தசாமிநாயனர் கனிஷ்ட குமாரருமாகிய

V. P. K. இராமையா நாயனுரால்

இயற்றப்பெற்று

புலிவலம் வ. வீ. பக்கிரிசாமி மேஸ்திரியார்
அவர்களால் அச்சிடப்பெற்றது

விஜயபுரம்
கருணநிதி (பில்டிங்ஸ்) பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

33

Q26:417
1433
171308

உ

சிவமயம்.

ஸ்ரீ வள்ளிக்கும் தெய்வானைக்கும் சக்களத்திப் போராட்டம்.

171308

காப்பு விருத்தம்.

புள்ளிமா மயில்மீ தேறும் பூபதி ஞான வேலன்
வள்ளிதெய் வானை யேசல் மனமகிழ்ந் தன்போ டோதத்
தெள்ளிய தமிழ்நா லேந்துந் தேவியின் கடாக்ஷத் தன்னை
அள்ளியென் கரத்தா லுண்ண ஐங்கரா அருள்செய் நன்றே.

அக்கனுலாயபனுவா என்ற மெட்டு.

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

தெய் ஆரடி திருட்டு சிறுக்கி எந்தன்
ஆசை நாயகன்பின்
கூசாமல் வந்தவள் (ஆரடி)
ஏரடி நீ வெளியே இனி
இங்கு நின்றால்மான
பங்கம் செய்வேனடி (ஆரடி)

வள்ளி தாறுமாறாகவே பேசி மிக்க
தாண்டிக்குதித்திட
வேண்டாங்கைவீசி (தாறு)
கூறுவேன் கேளாயங்கே என்னை
குமரன் மணந்து
கூட்டிவந்தாரிங்கே (தாறு)

தெய் என்னசொன்னாயடி சேதி இலை
எச்சில் பொறுக்குமோர் ஈனகுற ஜாதி
உன்னைமணந்தா ரென்றாய் நல்ல
ஒழுங்கிது சுணைமழுங்கினலண்டி (ஆரடி)

வள்ளி ஜாதியை இழுத்து இகழ்ச்சி பேசத்
தகுமோஇப்படி அடியேபுலைச்சி
ஓதிடுவாயினி நான் எங்கே
உன்னைமதிப்பது சின்னபுத்திக்காரி (தாறு)

தெய் அடி சின்னஜாதிகுற சிறுக்கி எங்கே
செப்பவந்தாயெதிரிப்படி முறுக்கி
முன்னே நில்லாதே போடி உந்தன்
மூக்குமுலையறுத்தாக்கினை செய்குவேன் (ஆரடி)

வள்ளி மெத்தப்படிக்காதே ராங்கி இங்கே
வேலவனைவிட்டு விடடிபாங்கி
நத்தியழைத்தேகுறேன் இன்று
நாரியென்தாய் தந்தையார்வீடு சேர்கிறேன் (தாறு)

தெய் நல்லமுகூர்த்த மறிந்து முந்தி
நானல்லோகிழக்கு முகமாயிருந்து
வல்லவனை மணந்தேன் இன்று
வந்து நீ விடென்றால் வாயை கிழிப்பேண்டி (ஆரடி)

வள்ளி கொட்டு முழக்குகளோடு தாலி
கட்டிக்கொண்டனையோ நீ கெட்டகேடு
மட்டிசிறுக்கிபோடி ஒப்பன்
வலியகட்டி கொடுத்தாண்டி நாடி (தா

தெய் பட்டியுன்நாவை யறுப்பேன் இங்கே
பாரடிலண்டியுன் பல்லினை யுடைப்பேன்
கெட்டித்தனம் பேசுறாய் குடி
கேடியுன் ஜாதியின் வாடிக்கை யறிவேன் (ஆரடி

வள்ளி வாடிக்கை என்னடி கண்டாய் மிக்க
வாய்மதமாய் வித்தியாசம் நீ விண்டாய்
வேடிக்கையாய் பேசாதே நீங்கள்
மேலானஜாதியோ மேட்டிமை எண்டி (தாறு)

தெய் மேலானஜாதி நானல்லவா வெட்ட
வெளியாயுன்குலத் தொழிலைச் சொல்லவா
கேளடி உன்னினத்தார் தெருவில்
கெஞ்சிநின்று கூழுங் கஞ்சிவாங்குவரே (ஆரடி)

வள்ளி சூரபத்மனாலுன் தந்தை பட்ட
துயரைஎடுத்து சொல்லவோவிந்தை
கூருகெட்டே யொழிந்தான் தண்ணீர்
குடிக்ககிட்டாதந் நாளிலே யலைந்தான் (தாறு)

தெய் காட்டுப்பூனை தின்குஞ் ஜாதி ஊரார்
கண்டுசிரிக்குறா ருங்களின் சேதி
மேட்டிமை தானுமுண்டோ கடை
வீதிகளில் வந்துபாரடி சங்கதி (ஆரடி)

வள்ளி தாருகனால் பட்ட பாடு இந்த
தாரணியே சொல்லுந்தான் கெட்டகேடு
வீரியம்பேசாதடி உங்கள்
விண்ணவர்களன்று மீன் சுமந்தார்களடி (தாறு)

பொன்னுலவு சென்னிகுள மென்ற

காவடிச் சிந்து வர்ண மெட்டு.

ய் மீன்சுமந்தா ரென்றிகழ்ந்து தான்புகன்ற சங்கைகெட்ட
வேடக்குறக்குட்டி சொல்வேன் தேரடி—தொழில்
கூடைமுறங்கட்டுகின்றீர் பாரடி—ஜனம் [னால்
மெத்தவுற்றிடு முற்சவங்களில் நத்தி மெள்ளவுங் கத்ரிக்கோலி
வெட்டுவீர் கழுத்துமணி நின்றுமே—போலீஸ்
கட்டியுதைப்பாருங்களைக் கண்டுமே

வள்ளி கட்டியுதைப்பார்களென்றே கெட்டித்தனமாயுரைத்த
காரிகையுன் தந்தைசேதி கேளடி=யதை
கூறிடவும் வெட்கக்கேடந் நாளடி—யந்த [முனிவனால்
கன்னியகலிகை தன்னைக்களவினில் உன்னிமருவிட நண்ணி
கண்களாயிரம்பெற்றது வோபலம்—கேட்டோர்
காரியுமிழ் கின்றாரையோ கேவலம்

ய் காரியுமிழ்கின்றாரென்றே கூறவந்த நாரிநீயோர்
கானகத்தின் மானின்குட்டி யாமடி—உந்தன்
மானவெட்கந் தானுமிங்கு போமடி—சந்தைக் [திருடுவீர்
கடைகள்தன்னிலுங் களவுசெய்குவீர் உடைகளும் பணிபலவுங்
கண்டுகொண் டுதைக்கும்போது அஞ்சியே—பல்லை
காட்டுவீர்கள் மெத்தமெத்தக் கெஞ்சியே

ள்ளி பல்லைக் காட்டுவீர்களென்று சொல்லிக்காட்ட வந்தாயின்று
பாவையே நீ கேளடியோர் வாக்கியம்—உங்கள்
தேவர்கள் தான்மட்டுமென்ன யோக்கியம்—முன்னே
பாரலைந்ததுஞ் சீர்குலைந்ததும் ஊரிழந்துமே சூரானுதை
பட்டு வெட்கங் கெட்டுவோட வில்லையா—சொல்வாய்
முட்டியானைக் குட்டிநீயு மில்லையா

தெய் ஆனைக்குட்டியென்றுரைத்த மானங்கெட்ட பைங்குறத்தி
அற்பஜாதி உங்களைப்போ லாரடி—எதிர்
செப்ப நீதி யுண்டோயிங்கே தேரடி—சற்றும்
அச்சம்நாணம் மடம்பயிர்ப்பது வைச்சிலாத தடிச்சிறுக்கிநீ
யானதினா லிங்குவந்தாய் தேடியே—எந்தன்
ஆளனைத் துரத்திக்கொண்டு நாடியே

வள்ளி ஆளனை துரத்திக்கொண்டு நானிங்ஙனம் வந்தேனென்ற
அறிவுகெட்ட சக்களத்தி போடிபோ—அடி
வரிசையற்ற சக்கிலிச்சி நாடிக்கேள்—எந்தன்
அண்ணன்மார்களின் முன்னஞ்சண்முகன் என்னைமாமணங்
[கொண்டுவந்தனர்

அப்படி இருக்க என்னை எள்ளுறாய் எண்டி
தப்பிலிச்சிறுக்கி வீணாய் தள்ளுறாய்

தெய் தப்பிலிச் சிறுக்கி யென்று இப்படிநீ செப்புதற்கு
தந்ததாரு உந்தனுக்கித் தைரியம்—அந்த
கந்தனாலே வந்ததோயிவ் வீரியம்—சரி
தானறிந்தனன் விளக்கு மாறிதோ நானெடுத்து பிடித்துமே அப்
தட்டுவாணியுன் கெருவம் போக்குறேன்—உன்னைத்
தொட்டுக்கொள்ளக் கூடாதென்றே பார்க்கிறேன்

வள்ளி தொட்டுக்கொள்ளக் கூடாதென்று சட்டமிங்கே பேசவந்த
கெட்டிக்காரி உண்மைதான் நீ கூர்வது—என்னைத்
தொட்டவனை யெப்படி நீ சேர்வது—நல்ல
சொர்ணை யுடையவ ளாகில்முருகனை தருணம் வெளியிலே [தள்ளிவிடுவது
சுத்தவீரத் தன்மையாகும் பாரடி—வீட்டில்
வைத்துக்கொள்ளலாமோபதில் கூறடி

தெய் வீட்டில்வைத்துக் கொள்வதற்கும் ஓட்டிவிடு கின்றதற்கும்
வேசிநீயோ சொல்கிறவள் ஞாயமே—இங்கே
வெல்லுமோடி உந்தன்சம்ப்ர தாயமே—ஒரு
விலைமடந்தையை மருவினுமரனக் குவலயந்தனில் பிரியநாதனை
விட்டுவிடு வாரோயாருங் கூறடி—வெட்கம்
கெட்டுநீயின் றோடவைப்பேன் பாரடி

வள்ளி ஓடவைப்பேன் பாரடியென் றோடம்பர மாயுனை
உலக்கைபோலக் கையென்னடி நீட்டுறாய்—எங்கே
விளக்குமாறு தனையெடுத்துக் காட்டுறாய்—பயந்
தோடிவிடுவேனென் றெண்ணிடாதடி வேடர்குலத்திறந் [தன்னைப்பாரடி
ஒண்டொடி யுனக்கினியான் காட்டுறேன்—புத்தி
இன்றுராமையன் கவியா லூட்டுறேன்

சரசக்காரமாமா என்றமெட்டு; பின் வேறு.

தெய் அடியே சிறுக்கி யேது—இங்கே
ஆரிடத்திலிவ் வாது—சற்றும்
அஞ்சிடாமலே மிஞ்சிப்பேசுறாய்
நெஞ்சிலேயுப்பு வைத்துச்சுடுகுவேன் (அ

வள்ளி நிறுத்தடி சும்மா ஏண்டி—நின்று
நீ குதிக்குறாய் தாண்டி—எந்தன்
நெஞ்சில் நீஉப்பு வைத்துச் சுட்டிடில்
வஞ்சியானுன்னை லேசில்விடுவேனோ (

நல்லதடியுன் சமர்த்தை—இப்போ
நானறிகிறேன் பரத்தை—எந்த
நாச்சியாளுட வீட்டில்வந்துநீ
பேச்சதிகம் படித்துமேநிற்கிறாய் (அ)

வள்ளி பட படப்பாய்க்கை யோங்கி—கொண்டை
பற்றவாரா யென்ன ராங்கி—வந்து
பாரடியிங்கு ராமையன்தமிழ்
படித்துஇடித்து அடித்தேஓட்டுவேன் (நி)

தெய் ஓட்டுவதெங்கடி அடித்தே—இதோ
உனது கொண்டையைப் பிடித்தேன்—இங்கே
உந்தன்சலுவைக் காரனைக்கூப்பிடு
வந்துபார்க்கட்டும் வேடிக்கைதெரியும் (அ)

விஷயம் கொண்டை பிடித்துச் சண்டை—யிடுஞ்
கூச்சல் கேட்டுவ ரண்டை—திருக்
கோழியங்கொடி வேல்கரம்பிடி
சோமளக்குக வேள்வந்துநின்று
நடக்குஞ் சங்கதி கண்டார்—மனம்
நாணி வெட்கமுங் கொண்டார்.

தெய்வானையிடம் சுப்ரமணியர் சமாதானங் கூறுதல்

சுப்ர பொறு பொறுமட மானே—எந்தன்
பொற்கொடி தெய்வ யானே—சண்டை
போட்டுக்கொள்வது நீட்டல்லசொன்னேன்
கேட்டிடுவள்ளி கொண்டையைவிட்டிடு (பொ)

தெய் போதும் போதுமிச் சிலாக்யம்—எட்டிப்
போமறிகுவேன் யோக்யம்—ஒன்றும்
பூவையென்னிட மாகவந்தினி
மேல்புகன்றிட வேண்டியதேயில்லை (போ)

சுப்ர கோபத்தை விடு மாதே—நான்
கூறு மொழிதள் ளாதே—குறக்
கும்புவந்திடில் வன்புவந்திடும்
துன்புறவழி வைத்துவிடாதே (கோ,

யோ நகைக்குமே யென்னை யுலகம்—இது
நாரதர் செய்த கலகம்—எந்தன்
நாயகிதெரி வாயடியினி
ஞாயமல்லவே வள்ளியைவிட்டாலும் (ந)

தெய் ஞாயமல்லவே என்று—ரொம்ப
நாணய மாக நின்று—இங்கே
நவிலவந்தீரே புவியிற்கேவலம்
இவளையெப்படித் தொட்டுக்கொள்ளத்தகும்
சாற்றுதல் சரி யாமா—இவள்
சட்டிபானை தொட லாமா (போ)

சுப்ர தொடத் தகாது என்றாலும்—என்ன
செய்வ தினிசொல் மேலும்—எந்தன்
தோகையேவள்ளி மாதைவிட்டிடில்
சாகுவேனுடன் சரணஞ்செய்குறேன்
கருணை வையடி மாதே—வீணாய்
கலகத்தை விளைக் காதே (போ)

171308

வள்ளியிடம் சமாதானங் கூறுதல்.

சுப்ர தித்திக்குஞ் செழுந் தேனே—எந்தன்
தேவியே வள்ளி மானே—சொன்னேன்
தெரிந்துகொள்ளிதை மாமனிந்திரன்
அறிந்திடில்பெருந் துன்பம்விளைந்திடும்
அவளைச் சென்று வணங்கு—சற்று
கவனிப்பா யிதே ஒழுங்கு

வள்ளி நல்ல ஒழுங்குதானித் தினமே—கண்டேன்
உமது தப்பிலித் தனமே—முன்னே
ஓகோ நீர்சொன்ன வார்த்தை நம்பியே
ஆகினேன்மதி மோசமிப்படி
செய்குவீரென்றே அறியேன் உந்தன்
திருட்டுப்புத்தியை தெரியேன்

சுப்ர உன் ஜாதிக்குணங்காட்டாதே—நான்
சாற்றுவதைக்கேள் மாதே—அவள்
தான்பெரும்பணக் காரன்மகளடி
வீண்பிலுக்குக ளொன்றுஞ்சொல்லாதடி
கூறினேன் கண்டு தேரு—வீட்டில்
எறிக் கொண்டுபின் பாரு

யாருங்—கண்டிடி விகழ்ந் துரைப்பார்—மிக்க
கைகொட்டி நின்று சிரிப்பார்—உந்தன்
காலில்விழச்சொன் னாலும்வீழ்கிறேன்
கேலிக்கிடம்வை யாதேதள்ளிநீ
சண்டறி சொல்லும் பான்மை—உனக்
குண்டு பின்னாலே மேன்மை

ஷபம் என்று புத்தி யிவ்வித மெடுத்து—குகன்
புகல வள்ளியு மடுத்து—தெய்வப்
பூவைகுஞ்சரி சேவடிதனி
லேவணங்கினள் கண்டுமென்மேலும்
வாழ்த்தினளந்தமாது—மெத்த
மனமகிழ்ந்தேயப்போது
அறுமுகன்கண்டு களித்து—ராமை
யன்தமிழ்க்கரு ளளித்து—அந்த
அணங்கெனுந்தெய்வ யானைவள்ளியும்
வணங்கிவந்திரு பாலுமுற்றிட
ஆனந்தக் கடலாழ்ந்தார்—பர-மானந்தமுடன்வாழ்ந்தார்

அருட்கவி M. K. P. M. மனோரஞ்சித நாயனாரால் எழுதிய ஆசீர்வாதம்.

சீர்புகழும் வள்ளிதெய் வானை யேசல் சிந்தைமகிழ்ந் தடியவர்கள்
சிரமே லேந்த
ஊர்புகழும் திருநெய்ப்பேர் வாழுங் கந்த னுத்தமனின் நற்றவத்தா
லுதித்த பாலன்
பேர்புகழும் ராமைய் நாய னென்போன் பேரின்பத் தமிர்தரசம்
போலே பெய்த
நேர்புகழும் கவிஇசைத்த நேர்த்தியாலே லெட்சுமி கடாட்சமிட
நினைவுண் டாமே.

விஜயபுரம்—வித்துவான் வெ. நா. சபாபதி தாசரால் இயற்றிய சாற்றுக்கவி வேண்பா.

மாதுவள்ளி தெய்வானை மணவாளன் வேலனையெப்
போதும் பிறியமனம் எண்ணாது—வாதுபுகும்
சக்களத்திப் போராட்டச் சண்டை சிந்துபாடினன்
நக்கனருள் ராமையா நாவலனே.

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ்—விஜயபுரம் 33 vdm